செ.வெ.எண்-55 நாள்-27.08.2021

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூா் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வப் பயிலும் வட்டத்தின் மூலம் பல்வேறு மத்திய, மாநில அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. எனவே, கோவிட்-2019 பெருந்தொற்று காரணமாக இப்பயிற்சி வகுப்புகள் இணையதள வாயிலாக நடத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது அரசு அறிவித்துள்ள வழிகாட்டுதல்களின்படி இப்பயிற்சி வகுப்புகள் நேரடியாக நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் விரைவில் அறிவிக்கப்படவுள்ள தொகுதி-I,II,II-A & IV பணிக்காலியிடங்களுக்கான நேரடி இலவச பயிற்சி வகுப்பு அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையத்தில் 01.09.2021 முதல் நடைபெறவுள்ளது.

இவ்விலவச பயிற்சி வகுப்பில் சேருவதற்கு விருப்பமுள்ள அரியலூா் மாவட்டத்தைச் சார்ந்த படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையத்தினை தங்களது ஆதாா் அட்டை, வேலைவாய்ப்பு பதிவு அடையாள அட்டை மற்றும் சுயவிவரக்குறிப்புகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவா் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**